


தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, செப்டம்பர் 19, 2026 | இதழ் 159

# வால்கிரீன்ஸ் நிறுவனத்துடன் முதல்வர் விஜய் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து..!!

சென்னை, 19 செப்டம்பர் 2026: அமெரிக்காவை தலைமையிடமாக கொண்ட வால்கிரீன்ஸ் நிறுவனம், சென்னை தரமணியில் திறன் மையம் அமைக்க முதல்வர் விஜய் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் முன்னிலையில் நேற்று (18.9.2026) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், தமிழ்நாடு அரசால் சென்னையில் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள ஓம்ஆர் ஜிசிசி வழித்தடத்தில் அமைந்துள்ள டிஎல்எஃப் டவுண்டவுண் தரமணி வளாகத்தில், முதலாம் ஆண்டு 250 நபர்களுக்கு உயர் மதிப்பு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையிலும், வரும் ஆண்டுகளில் விரிவாக்கம் மேற்கொள்ளும் வகையிலும் அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட வால்கிரீன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் அமைக்கவுள்ள தனது முதல் உலகளாவிய திறன் மையத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

வால்கிரீன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்

அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட வால்கிரீன்ஸ் நிறுவனம். உலகளவில் முன்னணி சுகாதார மற்றும் மருந்தக சேவை நிறுவனமாக விளங்குகிறது. மருந்தகச் சேவைகள், சுகாதாரப் பராமரிப்பு மற்றும் நுகர்வோர் சுகாதாரப் பொருட்கள் துறைகளில் செயல்பட்டு வரும் இந்நிறுவனம், தனது முதல் உலகளாவிய திறன் மையத்தை (குளோபல் கேபபிளிட்டி சென்டர் - ஜிசிசி) இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் அமைக்க முன்வந்துள்ளது.



தொழில்நுட்பம் மற்றும் வணிக சேவைகளை மையமாகக் கொண்டு அமையவுள்ள இம்மையம், தமிழ்நாடு அரசால் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள ஓஎம்ஆர் ஜிசிசி வழித்தடத்தில் அமைந்துள்ள டிஎல்எஃப் டவுண் டவுனண் தரமணி வளாகத்தில் நிறுவப்படவுள்ளது. இன்று தமிழ்நாடு முதலமைச்சர் முன்னிலையில் முதல் ஆண்டு 250 நபர்களுக்கு உயர் மதிப்பு வேலைவாய்ப்பு மற்றும் வரும் ஆண்டுகளில் விரிவாக்கம் என்ற இந்நிறுவனத்தின் உலகளாவிய திறன் மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிறுவனம் இந்தியாவிலேயே முதன் முறையாக அமைக்கவுள்ள உலகளாவிய திறன் மையம் தமிழ்நாட்டில் அமைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம். ஜிசிசி துறையில் உயர் மதிப்புக் கொண்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கும் தமிழ்நாடு அரசின் கொள்கைக்கு மேலும் ஊக்கமளிப்பதுடன், தமிழ்நாட்டின் ஜிசிசி வளர்ச்சிப் பயணத்தில் வால்கிரீன்ஸ் இணைவது. மாநிலம் உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் வணிகச் சேவை மையமாக உருவெடுத்து வருவதையும் எடுத்துக் காட்டுகிறது.

இந்நிகழ்வின்போது தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாட்டிலுள்ள டயர்-1 & டயர்-3 நகரங்களிலுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிட கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வில், தொழில் துறை அமைச்சர் எஸ். கீர்த்தனா. தலைமைச் செயலாளர் முனைவர் மு. சாய்குமார். இ.ஆ.ப. தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ச. விஜய குமார். இ.ஆ.ப. வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தீபக் ஜேக்கப். இ.ஆ.ப. வாகிரீன்ஸ் உலகளாவிய திறன் மையத்தின் தலைவர் உமாபதி விஸ்வநாதன், வால்கிரீன்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் மசூத் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லண்டனில் இருந்து சென்னை திரும்பினார் முதல்வர் விஜய்: ரூ.15,300 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளதாக தகவல்

சென்னை, 19 செப்டம்பர் 2026: தமிழ்நாடு முதல்வர் விஜய் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக கடந்த 10ம் தேதி இங்கிலாந்து பயணம் மேற்கொண்டார்.

லண்டனில் கடந்த 12ம் தேதி இங்கிலாந்து நாட்டிற்கான இந்திய தூதர் குமரன் பெரியசாமியை சந்தித்து, இந்தியா-பிரிட்டன் விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தின் பின்னணியில், தமிழ்நாடு மற்றும் பிரிட்டனுக்கு இடையே உருவாகக்கூடிய வாய்ப்புகள் மற்றும் கூட்டாண்மைகள் குறித்து கலந்துரையாடினர்.

தமிழகத்தில் மோட்டார் ஸ்போர்ட்ஸ் நகரம் அமைப்பதற்காக சில்வர்ஸ்டோன் மோட்டார் ரேசிங் சர்க்யூட்டைப் பார்வையிட்டு, 2026 மிச்செலின் லீ மான்ஸ் கோப்பை கார் பந்தயத்தை தொடங்கி வைத்தார். அப்போது நடிகர் அஜித் குமாரை சந்தித்துப் பேசிய நிகழ்வும் கவனம் பெற்றது.

வாகன உதிரிபாக உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் மின்கட்டமைப்பு உபகரணங்கள் மற்றும் உலகளாவிய திறன் மையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், புதிய தொழில் முதலீட்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நோக்கக் கடிதம் என மொத்தம் 15,300 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து, 10,000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை நோக்கி வரும் தொழில் முதலீடுகளை சாத்தியமாக்கவும், தமிழ்நாட்டில் அதன் செயல்பாடுகளை நிறுவவும் தேவையான உதவிகளையும், நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு அரசின் உயர் அலுவலர்களுக்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.



லண்டன் சென்றிருந்த தமிழக முதல்வர் விஜய், தனது லண்டன் பயணத்தை முடித்துக்கொண்டு, நேற்று காலை 8 மணிக்கு, எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானத்தில், துபாய் வழியாக, சென்னைக்கு திரும்பி வந்தார். சென்னை பழைய விமான நிலையம் கேட் எண் 6 வந்தடைந்த முதலமைச்சரை, தமிழ்நாடு அமைச்சர்கள் அரசு உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.

அதன்பின்பு முதல்வர் சென்னை விமான நிலையத்தில் இருந்து, கார் மூலம் தனது இல்லத்துக்கு புறப் பட்டுச் சென்றார் என தமிழக அரசு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 13 மசோதாக்களில் 12 மசோதாக்களுக்கு ஆளுநர் அர்லேகர் 5 நாட்களில் ஒப்புதல்!

சென்னை 19, செப்டம்பர் 2026: தமிழக அரசின் சட்டப் பேரவை கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட 12 மசோதாக்களுக்கு 5 நாட்களில் ஆளுநர் அர்லேகர் ஒப்புதல் அளித்திருக்கிறார். மொத்தம் 13 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்ட நிலையில் 12 மசோதாக்களுக்கு ஆளுநர் அர்லேகர் ஒப்புதல் அளித்துள்ளார்.

கடந்த ஆகஸ்ட் 5ஆம் தேதி தமிழக சட்டப்பேரவையில் 2026-27 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கியது. பின்னர் பட்ஜெட் மீதான விவாதம், துறைவாரியாக மானிய கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றன. கடந்த செப்டம்பர் 8ம் தேதி பட்ஜெட் கூட்டத்தொடர் நிறைவடைந்தது. இந்த கூட்டத்தொடரில் மொத்தம் 13 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட 13 மசோதாக்களும் ஆளுநர் அர்லேகரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இதைப் பரிசீலித்த ஆளுநர் அர்லேகர், 6 மசோதாக்களுக்கு 4 நாட்களிலும், மேலும் 5 மசோதாக்களுக்கு 5 நாட்களிலும் என மொத்தம் 12 மசோதாக்களுக்கு உடனடி ஒப்புதல் வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்.




இதில் எம்எல்ஏ-க்களுக்கு கார் வழங்குவது தொடர்பான மசோதாக்கள் உள்பட 12 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பான மசோதா குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு நகர் ஊரமைப்பு திருத்தச் சட்டம் 2026, தமிழ்நாடு தொழில் எளிதாக்கல் திருத்தச் சட்டம், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் திருத்த சட்டம், தமிழ்நாடு ஊதியம் வழங்குதல் திருத்த சட்டம், தமிழ்நாடு ஊராட்சிகள் இரண்டாம் திருத்தச் சட்டம், தமிழ்நாடு நிதி ஒதுக்கீட்டுச் சட்டம், தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை ஒழுங்குமுறைப்படுத்துதல் இரண்டாம் திருத்த சட்டம், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் திருத்தச் சட்டம், தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரி திருத்த சட்டம், தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரி இரண்டாம் திருத்தச் சட்டம், தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரி இரண்டாம் திருத்தச் சட்டம், எம்எல்ஏக்களுக்கு கார் வழங்குதல் உள்ளிட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் ஆளுநர் அர்லேகர் அளித்துள்ளார்.

# இந்தியக் கடற்படைக்கான அதிநவீனப் போர்க்கப்பல் கட்டுமான பணிகள் துவக்கம்

சென்னை 19, செப்டம்பர் 2026: அதிநவீன ஏவுகனைப் போர்க்கப்பல் திட்டத்தின் 2-வது கப்பல் கட்டுமானத்திற்கான பணி கொச்சி கப்பல் கட்டுமானத் தளத்தில் செப்டம்பர் 17 அன்று தொடங்கப்பட்டது. இந்தியக் கடற்படையை வலிமைப்படுத்தும் நோக்கில் நவீன போர் ஆயுதங்களுடன் கூடிய 6 அதிநவீனப் போர்க் கப்பல்கள் கட்டுவதற்காக கொச்சி கப்பல் கட்டுமான தள நிர்வாகத்துடன் கடந்த 2023-ஆம் ஆண்டு ஒப்பந்தம் போடப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் கீழ் 2-வது கப்பல் கட்டுமான பணிகள் கொச்சி கப்பல் கட்டு மான தளத்தில் 2026 செப்டம்பர் 17 அன்று தொடங்கியது. இந்த நிகழ்ச்சியை போர்க் கப்பல் உற்பத்தி மற்றும் கொள்முதல் குழு துணைக் கட்டுப்பட்டு அதிகாரியான ரியர் அட்மிரல் கபில் மேத்தா தொடங்கி வைத்தார். விழாவில் இந்தியக் கடற்படை, கொச்சி கப்பல் கட்டுமானத் தளத்தின் உயர்நிலை அதிகாரிகள் கலந்து கொண்டனர். எதிர்காலத்தில் ஏற்படும் போர்ச் சூழலுக்கு ஏற்ப இந்தியப் போர்க் கப்பல்களைத் தயார்படுத்தும் வகையில், போர்க் கப்பலில் அடுத்தத் தலைமுறைக்கான அதிநவீன ஆயுதங்கள், சென்சார்கள் பொருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் சிக்கலான கடல்சார் சூழலில் செயல்படக் கூடிய வகையில் வலிமையான, நவீன கடற்படையை உருவாக்கும் விதமாக மேக் இன் இந்தியா திட்டத்தில் இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## சாம்சங் இந்தியா கேலக்ஸி ஃபாரெவர் திட்டத்தின் மூலம் கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 அல்ட்ரா மற்றும் கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 ஸ்மார்ட்போன்களை குறைந்த மாதாந்திர இஎம்ஐ-யில் வழங்குகிறது

கோயம்புத்தூர் 19, செப்டம்பர் 2026: சாம்சங் இந்தியா தனது புதிய பிரீமியம் மடிக்கக் கூடிய ஸ்மார்ட்போன்களான கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 அல்ட்ரா மற்றும் கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 ஆகியவற்றை கேலக்ஸி ஃபாரெவர் திட்டத்தின் கீழ் மேலும் எளிதாக வாங்கும் வகையில் புதிய நெகிழ்வான கட்டணத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய 'புல்லட்-பேமண்ட்' வசதியின் மூலம் 24 மாதங்களுக்கு மாதாந்திர இஎம்ஐ 25% வரை குறைக்கப்படுகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கான இந்தத் திட்டத்தில், வாடிக்கையாளர்கள் சாதனத்தின் விலையில் 60% மற்றும் கேலக்ஸி ஃபாரெவர் திட்டக் கட்டணத்தை 24 மாத இஎம்ஐ-களாக செலுத்தலாம். மீதமுள்ள 40% தொகை 24 மாதங்கள் முடிவில் புல்லட் பேமண்ட் ஆக ஒத்திவைக்கப்படுகிறது. அதன் பின்னர் வாடிக்கையாளர்கள் புதிய கேலக்ஸி சாதனத்திற்கு அப்கிரேட் செய்யலாம், 40% தொகையை செலுத்தி தற்போதைய சாதனத்தை வைத்துக் கொள்ளலாம் அல்லது சாதனத்தைத் திருப்பி அளித்து திட்டத்திலிருந்து வெளியேறலாம். மேலும், தகுதியான காலத்திற்கு முன்பாக அப்கிரேட் அல்லது ரிட்டர்ன் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அஸ்யூர்ட் பைபேக் வசதியும், ஆக்ஸிடென்டல் மற்றும் லிக்விட் டேமேஜ்-க்கு சாம்சங் கேர்+ பாதுகாப்பும் இந்தத் திட்டத்தில் அடங்கும்.




கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 அல்ட்ரா, 8-இஞ்ச் பிரதான திரை, 200எம்பி கேமரா, ஸ்நாப்டிராகன் 8 எலைட் ஜென் 5 கேலக்ஸி ப்ராஸஸர் மற்றும் 5000எம்ஏஹெச் பேட்டரியுடன் 45டபிள்யு ஃபாஸ்ட் சார்ஜிங் வசதியை வழங்குகிறது. கேலக்ஸி இசட் ஃபோல்ட்8, 3000 நிட்ஸ் பீக் பிரைட்னஸ் கொண்ட பிரதான திரை, டுவல் 50எம்பி கேமரா, 4800எம்ஏஹெச் பேட்டரி மற்றும் 201கிராம் எடையுடன் சிறந்த மடிக்கக்கூடிய அனுபவத்தை வழங்குகிறது.

## அக்டோபர் 2026 முதல் தனது வர்த்தக வாகனங்களின் விலைகள் உயரவுள்ளதை டாடா மோட்டார்ஸ் அறிவித்துள்ளது

சென்னை 19, செப்டம்பர் 2026: இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக வாகனங்கள் உற்பத்தியாளரான டாடா மோட்டார்ஸ், தனது வர்த்தக வாகனங்களின் விலையை 1 சதவீதம் வரை உயர்த்துவதாக இன்று அறிவித்துள்ளது. இந்த விலை உயர்வு 2026 அக்டோபர் 1 முதல் அமலுக்கு வருகிறது. கமாடிட்டி மற்றும் பிற உற்பத்திச் செலவுகளின் உயர்வைச் சரிசெய்வதற்காக இந்த விலை திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது. இந்த விலை உயர்வு மாடல் மற்றும் வேரியண்ட்டைப் பொறுத்து மாறுபடும்.

## மகாராஷ்டிரா மற்றும் பிற மாநிலங்களில் புத்துணர்ச்சியையும் தனித்துவமான பண்டிகை பிராண்ட் அனுபவங்களையும் வழங்கும் கொக்கக்-கோலா இந்தியா

சென்னை 19, செப்டம்பர் 2026: இந்த பண்டிகை காலத்தில், கொக்கக்-கோலா இந்தியா தனது பல்வேறு வகையான பானங்களின் போர்ட்ஃபோலியோவை நுகர்வோருக்கு நெருக்கமாக கொண்டு வந்து, அவர்களின் பண்டிகை அனுபவத்தை வடிவமைக்கும் தருணங்களில் புத்துணர்ச்சியையும் நீரேற்றத்தையும் (ஹைட்ரேசன்) வழங்குகிறது. மகாராஷ்டிரா மற்றும் பிற பிராந்தியங்களில் தனது இருப்பை விரிவுபடுத்தி, நிறுவனம் நேரடியாக துடிப்பான பந்தல்கள், குடியிருப்பு சங்கங்கள் (ஹவுசிங் சொசைட்டிஸ்) மற்றும் ஆன்-தி-கோ ஹாட்ஸ்பாட்களுக்கு தனித்துவமான பிராண்ட் அனுபவங்களை கொண்டு சென்று உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து செயல்படுகிறது. எண்ணற்ற உள்ளூர் கடைகளில் தங்களுக்குப் பிடித்த பானங்கள் எளிதாகக் கிடைப்பதை உறுதிசெய்வதன் மூலம், கொக்கக்-கோலா நண்பர்களும் குடும்பத்தினரும் பண்டிகைகளின் போது மகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வதை மேலும் எளிதாக்குகிறது.

மாஸா சொசைட்டி ஆனந்தோத்சவ் மூலம் மாசா பிராந்தியத்தில் உள்ள பல குடியிருப்பு சங்கங்களுக்கு ஒரு தனித்துவமான சமூக அனுபவத்தைக் கொண்டு வரும். வெற்றி பெறும் குடியிருப்பு பகுதிகளுக்கு உற்சாகமான பரிசுகளும், பிராண்ட் தூதர்களான Riteish மற்றும் ஜெனிலியா-வை சந்திக்கும் சிறப்பு வாய்ப்பும் கிடைக்கும்.

மக்களுக்கு நேரடியாகவே புத்துணர்ச்சியைக் கொண்டு சேர்க்கும் வகையில், 'கோக் ஆன் வீல்ஸ்' பரபரப்பான பண்டிகை கூடங்களிலும் மற்றும் நெரிசலான போக்குவரத்து வழிகளில் நுகர்வோருக்கு குளிர்ந்த பானங்களை வழங்கும். அன்றாட பண்டிகை உணவு அனுபவத்தை மேலும் சிறப்பிக்கும் வகையில், கொக்கக்-கோலா பிரபல உள்ளூர் உணவகங்கள் மற்றும் உணவு மையங்களுடன் இணைந்து சிறப்பு மீல் காம்போக்களை வழங்குகிறது. நண்பர்களும் குடும்பத்தினரும் தங்களுக்குப் பிடித்த பண்டிகை உணவுகளுடன் "கோக்குடன் ஆஹா" தருணத்தைப் பகிர்ந்து கொள்வதை எப்போதும் விட எளிதாக்கும் வகையில் இந்த உணவு சேர்க்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.




ஸ்ப்ரைட் X ஸ்பைஸி Pandal Trail மூலம் பண்டிகைகளின் போது நுகர்வோரின் பயணத்தில் பிராண்டை ஒருங்கிணைத்து, ஸ்ப்ரைட் தனது ஸ்ப்ரைட் X ஸ்பைஸி அனுபவத்தை பந்தல்களுக்குக் கொண்டு வரும். இது நுகர்வோரை பல பந்தல்களை பார்வையிடவும், காரமான உணவு சவால்களை எதிர்கொள்ளவும் அழைக்கிறது. ஸ்ப்ரைட் X ஸ்பைஸி ஸ்டாம்ப்புக் மூலம் அவர்கள் இந்த சவால்களை நிறைவு செய்து பயணத்தை மேற்கொள்ளும் போது ஸ்டாம்புகளை சேகரிக்கலாம் மற்றும் பிரத்யேக ஸ்ப்ரைட் மெர்ச்சன்டைஸ்களைப் பெறலாம். மூன்று ஸ்டாம்புகளைச் சேகரிக்கும் நுகர்வோர், கொரியாவுக்கான சுற்றுப்பயணத்தை வெல்லும் அதிர்ஷ்டக் குலுக்கலில் பங்கேற்கும் வாய்ப்பையும் பெறுவார்கள், இது பண்டிகை உணவுப் பயணத்திற்கு கூடுதல் உற்சாகத்தைச் சேர்க்கிறது.

கின்லி, பண்டிகை காலத்தில் நகரத்தை இயங்க வைப்பவர்களுக்கான நீரேற்றத்தில் (ஹைட்ரேஷன்) தனது கவனத்தை விரிவுபடுத்தும். இதன் மூலம் பணியில் இருக்கும் போக்குவரத்துக் காவலர்கள் சாலையில் நீண்ட நேரம் பணி புரியும் போது அவர்களுக்கு நீரேற்றம் கிடைப்பதை உறுதி செய்யும். இந்த அக்கறையுள்ள முயற்சியின் தொடர்ச்சியாக, இந்த பிராண்ட் போக்குவரத்துக் காவலர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களை ஒன்றுதிரட்டி ஒரு சிறப்பு பண்டிகைக் கொண்டாட்டத்தை நடத்தும், இது பாரம்பரிய அனுபவங்களைக் கொண்ட ஒரு பிரத்யேக சர்ப்ரைஸ் பந்தலுடன் நிறைவடையும். இந்த பண்டிகை மனநிலை கின்லி-வின் பேக்கேஜிங்கிற்கும் நீட்டிக்கப்படும், சிறப்பு பண்டிகை லேபிள்கள் பிராண்டின் இருப்பிற்கு ஒரு கொண்டாட்டத் தொடுதலை சேர்க்கும்.

## திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் பெயர் மற்றும் சின்னத்தை முடக்கியது தேர்தல் ஆணையம்..!!

சென்னை 19, செப்டம்பர் 2026: திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் பெயர் மற்றும் சின்னத்தை தேர்தல் ஆணையம் முடக்கியது. மம்தா பாணர்ஜி அணி மற்றும் ரிதப்ரா பாணர்ஜி அணி ஆகிய இரு தரப்பும் எதிர்வரும் இடைத் தேர்தலில் புதிய பெயர் மற்றும் சின்னத்துடன் போட்டியிட உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கு வங்க சட்டப் பேரவை தேர்தலுக்குப் பிறகு திரிணமூல் காங்கிரஸ் கட்சி இரண்டாக உடைந்தது. மம்தா பானர்ஜி தலைமையில் ஒரு பிரிவினரும், சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் ரிதப்ரத பானர்ஜி தலைமையில் மற்றொரு பிரிவினரும் செயல்பட்டு வருகின்றனர். தேர்தல் ஆணையத்திடம் ரிதப்ரத பானர்ஜி பிரிவினர் சார்பில் தங்களுக்கே திரிணமூல் காங்கிரஸ் எம்எல்ஏக்களில் பெரும்பாலானோரின் ஆதரவு இருப்பதாகக் கூறி, கட்சியின் சின்னத்துக்கு அரூப் ராய் உரிமை கோரினார். இதற்கு மம்தா தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.



இந்நிலையில், இந்தியத் தேர்தல் ஆணையம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'திரிணமூல் காங்கிரஸ் பெயர் மற்றும் சின்னத்துக்கு இருதரப்பினர் உரிமை கோரும் விவகாரத்தில் தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு) சட்டம், 1968-இன்கீழ் விரிவான ஆய்வு தேவைப்படுவதால் தற்காலிகமாக இருதரப்பும் கட்சியின் பெயர் மற்றும் சின்னத்தை பயன்படுத்த தடை விதிக்கப்படுகிறது. வரவுள்ள இடைத்தேர்தலில் தாங்கள் போட்டியிட விரும்பும் பெயர் மற்றும் சின்னத்தை இன்று காலை 11 மணிக்குள் சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது என தெரிவிக்கப்பட்டது.

## அரசுப்பணிகளுக்கு புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 51000 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை இம்மாதம் 19-ம் தேதி நடைபெறும் வேலைவாய்ப்பு முகாமில் பிரதமர் நரேந்திர மோடி வழங்குகிறார்

சென்னை 19, செப்டம்பர் 2026: அரசுப்பணிகளுக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 51,000 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை பிரதமர் திரு நரேந்திர மோடி வழங்குகிறார். இம்மாதம் 19-ம் தேதி நடைபெறும் வேலை வாய்ப்பு முகாமில் காணொலிக் காட்சி வாயிலாக பணி நியமன ஆணைகளைப் பெற்றுள்ள இளைஞர்களிடம் அவர் கலந்துரையாடுகிறார்.

நாடு முழுவதும் 45 இடங்களில் இந்த வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது. வருவாய்த்துறை, ரயில்வே அமைச்சகம், உள்துறை அமைச்சகம், சுகாதாரத்துறை, நிதி சேவைகள் துறை, பாதுகாப்பு அமைச்சகம் உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இளைஞர்கள் பணியில் சேரவுள்ளனர்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குவதிலும், நாட்டின் வளர்ச்சிச் சார்ந்த பணிகளில் இளைஞர்களின் பங்களிப்பை உறுதி செய்வதிலும், மத்திய அரசின் உறுதியான நிலைப்பாட்டை இந்த வேலை வாய்ப்பு முகாம் பிரதிபலிப்பதாக உள்ளது.



இந்த 20-வது வேலைவாய்ப்பு முகாமுடன் சேர்த்து இதுவரை பல்வேறு துறைகள் மற்றும் அரசு அமைப்புகளில் மொத்தம் 12.75 லட்சம் இளைஞர்கள் பணி நியமன ஆணைகளைப் பெற்றுள்ளன.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க், ஆர். மாதவன் அவர்களை பிராண்ட் தூதராகக் கொண்டு 'நத்திங் ஸ்மார் அபௌட் அஸ்' என்ற விளம்பரப் பிரச்சாரத்தை வெளியிடுகிறது

சென்னை 19, செப்டம்பர் 2026: 26 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 800 க்கும் அதிகமான கிளைகள் மூலம் 1 கோடிக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்து வருகின்ற உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் (உஜ்ஜிவன் எஸ்எஃப்பி), புகழ் பெற்ற நடிகரும் பத்மஸ்ரீ விருது பெற்ற வருமான ஆர். மாதவன் அவர்களை தனது பிராண்ட் அம்பாசிடராகக் கொண்டு, 'நத்திங் ஸ்மால் அபவுட் அஸ்' (எங்களைப் பொறுத்தவரை எதுவும் சிறியதல்ல) என்ற தனது புதிய பிராண்ட் பிரச்சாரத்தின் வெளியீட்டை அறிவித்துள்ளது.

இந்த பிரச்சாரமானது, ஸ்மால்' என்ற வார்த்தை, இந்த வங்கி முதன்மையாக சிறிய அளவிலான நிதித் தேவைகளுக்கு மட்டுமே சேவை செய்கிறது, வரையறுக்கப்பட்ட அளவிலான வங்கி தயாரிப்புகள் மற்றும் சேவைகளைக் கொண்டுள்ளது, அல்லது சிறிய அளவில் செயல்படுகிறது என்ற தோற்றத்தை சில நேரங்களில் உருவாக்கக்கூடும் என்கிற ஒரு முக்கிய வாடிக்கையாளர் நுண்ணறிவை அடிப்படையாகக் கொண்டது. இன்றைய உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் ஐ முன்னிறுத்துவதன் மூலம் இந்தக் கண்ணோட்டத்தை நிவர்த்தி செய்ய 'நத்திங் ஸ்மால் அபவுட் அஸ்' (எங்களைப் பொறுத்தவரை எதுவும் சிறியதல்ல) பிரச்சாரம் முயல்கிறது.




உஜ்ஜிவன், சேமிப்பு, வைப்பு, கடன் வழங்கல் மற்றும் வணிக வங்கி சேவை, வெளிநாட்டு செலாவணி மற்றும் என்ஆர்ஐ சேவைகள், அத்துடன் முதலீடு மற்றும் செல்வ மேலாண்மை தீர்வுகள் உள்ளிட்ட விரிவான வங்கி தீர்வுகளை வழங்குகிறது. பல்வேறு நிதித் தேவைகளைக் கொண்ட வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்கின்ற இதன் கடன் திட்டங்கள் ரூ.6,000 முதல் ரூ.250 கோடி வரையிலான வரம்பைக் கொண்டுள்ளன.

இந்த பிரச்சாரம் குறித்து கருத்து தெரிவித்த உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் இன் தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரி லக்ஷ்மன் வேலாயுதம் கூறியதாவது: "'எங்களைப் பொறுத்தவரை எதுவும் சிறியதல்ல' என்ற கருத்தானது, ஒரு மிகவும் உண்மையான வாடிக்கையாளர் நுண்ணறிவிலிருந்து உருவானது. 'ஸ்மால்' என்ற வார்த்தை சில நேரங்களில் எங்களது சேவைகள், பரிவர்த்தனை அளவுகள் அல்லது எங்கள் செயல்பாட்டின் அளவு ஆகியவை மட்டுப்படுத்தப்பட்டவை என்ற எண்ணத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதை நாங்கள் கண்டறிந்தோம். ஒரு பரந்த கிளை வலையமைப்பு மற்றும் பல்வேறு வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விரிவான வங்கி மற்றும் கடன் தீர்வுகள் ஆகியவற்றின் ஒரு விரிவான வரம்புடன் இன்றைய உஜ்ஜிவன் அந்த கண்ணோட்டத்தில் இருந்து மிகவும் வேறுபட்டது. இந்தப் பிரச்சாரத்தின் மூலம், பல்வேறு நிதித் தேவைகளுக்கு சேவை செய்யும் அளவு, வரம்பு மற்றும் சேவைகளின் பரந்த அளவு ஆகியவற்றைக் கொண்ட ஒரு வங்கியாக இன்று உஜ்ஜிவன் எத்தகைய நிலையில் உள்ளது என்பதை ஒவ்வொருவரும் காண வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். பல ஆண்டுகளாக தான் உருவாக்கியுள்ள நம்பகத்தன்மை, உண்மைத்தன்மை மற்றும் நம்பிக்கையுடன், இந்தச் செய்தியை எடுத்துச் சொல்வதற்கு ஆர். மாதவன், இயல்பாகவே பொருத்தமானவர்."

ஆர். மாதவனை உஜ்ஜிவன் நிறுவனத்தின் பிராண்ட் தூதராகத் தேர்ந்தெடுத்ததற்கு, அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் மதிப்புகளுக்கும் இந்த வங்கியின் மதிப்புகளுக்கும் இடையே உள்ள வலுவான ஒத்திசைவே காரணமாகும். பல ஆண்டுகளாக, ஆர். மாதவன் நேர்மை, பணிவு, பல்துறைத் திறன் மற்றும் உண்மைத்தன்மை ஆகியவற்றுடன் தொடர்புடைய ஒரு பிம்பத்தை உருவாக்கியுள்ளார். சீரான செயல்பாட்டின் மூலம் நம்பிக்கையைப் பெற்று, பார்வையாளர்கள் மற்றும் புவியியல் எல்லைகள் முழுவதும் வலுவான பிணைப்பை ஏற்படுத்தியுள்ளார். இந்தப் பண்புகள் உஜ்ஜிவன் நிறுவனத்தின் மதிப்புகளுடனும், வங்கி தனது வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களுடன் ஒரு வாக்க விரும்பும் உறவுடனும் நெருக்கமாக ஒத்துப்போகின்றன.

## கேரளத்தில் 3 நாட்களுக்கு மழை: கன்னியாகுமரியில் 1.7 மீட்டர் அலை எழும்ப வாய்ப்பு

சென்னை 19, செப்டம்பர் 2026: கேரளத்தில் இன்று முதல் 3 நாட்களுக்கு பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்யும் என்று திருவனந்தபுரம் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இன்று 3 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கேரளம் முழுவதும் கடந்த சில வாரங்களாக கடுமையான வெப்பம் நிலவி வருகிறது.

இந்நிலையில், இன்று முதல் அடுத்த 3 நாட்களுக்கு பல்வேறு பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக திருவனந்தபுரம் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இன்று ஆலப்புழா, கோட்டயம், இடுக்கி ஆகிய 3 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாளை கோட்டயம், இடுக்கி, மலப்புரம், கோழிக்கோடு ஆகிய 4 மாவட்டங்களுக்கும், 20ம் தேதி கோட்டயம், இடுக்கி, எர்ணாகுளம் ஆகிய 3 மாவட்டங்களுக்கும் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் கள்ளக்கடல் இயற்கை நிகழ்வு காரணமாக கன்னியாகுமரி, திருவனந்தபுரம், கொல்லம் கடலோரப் பகுதிகளில் கடல் சீற்றம் அதிகமாக இருக்கும் என தேசிய கடல்சார் தகவல் சேவைகள் மையம் எச்சரித்துள்ளது.

திருவனந்தபுரம், கொல்லம் கடற்பகுதியில் 0.8 முதல் 1.4 மீட்டர் வரையும், கன்னியாகுமரியில் 1.2 முதல் 1.7 மீட்டர் வரையும் அலைகள் எழும்ப வாய்ப்புள்ளது. எனவே மீனவர்களும், கடலோரப் பகுதி மக்களும் கடற்கரைக்கு செல்வதைத் தவிர்த்து, மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## சில்வர் ஸ்ட்ரீம் ஸ்டுடியோஸ் பேனரின் கீழ் சௌந்தர்யா திலீபன், என். ராஜேந்திரன், ராமு தங்கராஜ் தயாரிப்பில், பிளாக் ஒபிபோ புரொடக்ஷன் ஹவுஸ் சார்பில் அருண் மாதேஸ்வரன் வழங்கும் 'டிரான்ஸ்பர்'!

சென்னை 19, செப்டம்பர் 2026: பரபரப்பான கதைக் களக்கதை கொண்ட குறும்படம் 'டிரான்ஸ்பர்'. ஒரே பணியில் ஈடுபடுத்தப்படும் இரண்டு காவலர்கள், கொள்கை வேறுபாடுகளால் பிளவுபட்டு, கட்டுப்பாட்டை மீறிச் செல்லும் காவல் துறை என்கவுன்டர் சம்பவத்தை மையமாகக் கொண்டு இப்படம் உருவாகியுள்ளது. ஆரம்பத்தில் ஒரு காவல் துறை நடவடிக்கையாகத் தொடங்கும் சம்பவம், படிப்படியாக காவல்துறைக்குள்ளேயே உருவாகும் மோதலாக மாறுகிறது. கொள்கை ரீதியான பிளவு, தொழில்முறை கடமையுடன் நேரடியாக மோதும் சூழலில், நிலைமை தீவிரமடைகிறது.

தனிப்பட்ட நம்பிக்கைகள், நிறுவனப் பொறுப்பு மற்றும் அந்தத் தருணத்தின் அழுத்தம் ஆகியவை ஒன்றோடொன்று மோதுவதால், இரு காவலர்களாலும் கட்டுப்படுத்த முடியாத விளைவுகள் ஏற்படுகின்றன. கொள்கை ரீதியான பிளவுகள் நிறுவனங்களுக்குள்ளும் தனிப்பட்ட உறவுகளுக்குள்ளும் எவ்வாறு ஊடுருவுகின்றன என்பதையும், நெருக்கடியான தருணங்களில் கடமை, நம்பிக்கை மற்றும் அதிகாரம் ஆகியவற்றுக்கு இடையிலான எல்லைகள் எவ்வாறு ஆபத்தான வகையில் மங்கிவிடுகின்றன என்பதையும் இப்படம் பேசுகிறது.




நடிகர்கள்: கபில் வேலவன், ஜவஹர் சக்தி, சேகர் நாராயணன், வினோத் பிரான்சிஸ், அருண் குமார், பாலா கார்த்திக், துரை ஹரிகிருஷ்ணன்.

தொழில்நுட்பக்குழு விவரம்:

எழுத்து மற்றும் இயக்கம்: திலீபன், இணை இயக்குநர்: டி. ராமச்சந்திரன், இசையமைப்பாளர்: ஹரிஹரன் சுரேஷ், கலை இயக்குநர்: ராஜேஷ் மஹோ, ஒலி வடிவமைப்பு & கலவை: ஜெய்சன் ஜோஸ், டேனியல் ஜெஃப்பர்சன், கலரிஸ்ட்: பிரகாஷ், விஎஃப்எக்ஸ்: வீ டு, விளம்பர வடிவமைப்புகள்: போவாஸ்.

ஜான்சன் மோகன்தாஸ், கிரியேட்டிவ் தயாரிப்பாளர் மற்றும் காஸ்டிங் டைரக்டர்: விக்னேஷ் ராமகிருஷ்ணன், ஒளிப்பதிவாளர்கள்: பழனியப்பன் கதிர், நவீன் லோகநாதன், புரொடக்ஷன் டிசைனர்: ராமு தங்கராஜ், படத்தொகுப்பு: நாகூரன்

## 4,724 பணியிடங்களை ஒப்பந்த முறையில் நிரப்ப எதிர்ப்பு; தமிழகம் முழுவதும் செவிலியர்கள் ஆர்ப்பாட்டம்: நிரந்தர பணி நியமனம் செய்ய வலியுறுத்தல்

சென்னை 19, செப்டம்பர் 2026: அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள 4,724 செவிலியர் பணியிடங்களை 11 மாத ஒப்பந்த அடிப்படையில் நிரப்பும் முடிவை கைவிடக் கோரி, தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்பில் நேற்று (செப்.18) தமிழகம் முழுவதும் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழகம் முழுவதும் அரசு மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள 4,724 செவிலியர் பணியிடங்களை தற்காலிக அடிப்படையில் நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பணியிடங்கள் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை, மருத்துவம் மற்றும் ஊரக சுகாதாரப் பணிகள், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம், சென்னை மாநகராட்சி உள்ளிட்ட அரசு சுகாதார அமைப்புகளின் கீழ் உள்ள மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் நிரப்பப்பட உள்ளன.

அறிவிப்பின்படி, இந்த செவிலியர் பணியிடங்கள் 11 மாத ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன. பணிக்கு மாதம் ரூ.21,000 ஊதியம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தகுதியுடையவர்கள் செப்.25 மாலை 5 மணி வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, காலியாக உள்ள செவிலியர் பணியிடங்களை ஒப்பந்த முறையில் நிரப்புவதை அரசு கைவிட வேண்டும் என தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் வலியுறுத்தியுள்ளது.



செவிலியர் பணியிடங்களுக்கு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு நடத்தி, நிரந்தரத் தன்மை கொண்ட பணியிடங்களில் செவிலியர்களை நியமிக்க வேண்டும் என்பது சங்கத்தின் முக்கிய கோரிக்கையாக உள்ளது.

மேலும், அரசு மருத்துவமனைகளில் ஏற்கனவே பணியாற்றி வரும் செவிலியர்களுக்கு பணிச்சுமை அதிகரித்துள்ள நிலையில், காலிப் பணியிடங்களை தற்காலிக ஒப்பந்த முறையில் நிரப்புவதற்குப் பதிலாக நிரந்தர நியமனம் மேற்கொள்ள வேண்டும் என்றும் சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த கோரிக்கையை வலியுறுத்தி, தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட சுகாதார அலுவலகங்கள் முன்பாக இன்று கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான செவிலியர்கள் பங்கேற்றனர்.



## இந்தியா - நேபாள் இடையே வர்த்தகம், போக்குவரத்து அங்கீகரிக்கப்படாத வணிக நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதில் ஒத்துழைப்பு குறித்த பேச்சுவார்த்தை



சென்னை 19, செப்டம்பர் 2026: இந்தியா - நேபாளம் நாடுகளிடையே வர்த்தகம், போக்குவரத்து அங்கீகரிக்கப்படாத வணிக நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

இம்மாதம் 16, 17-ம் தேதிகளில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், வர்த்தகத்துறை இணைச் செயலாளர் திரு உஜ்வல்குமார் கோஷ் தலைமையிலான இந்தியப் பிரதிநிதிகள் குழுவும் நேபாள நாட்டில் தொழில்துறை அமைச்சகத்தின் இணைச் செயலாளர் திரு புத்த பகதூர் குருங் தலைமையிலான பிரதிநிதி குழுவும் பங்கேற்றன.

இவ்விரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம், அது சார்ந்த சிக்கல்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்வதற்கும் தர நிலைகள் உணவுப்பாதுகாப்பு, மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், ஆயுஷ் தயாரிப்புகள், எல்லைப் பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகள், ரயில், சாலை, போக்குவரத்து இணைப்பு வசதிகள், வர்த்தகம் சார்ந்த இதர அம்சங்கள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையேயான சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துவது குறித்தும் வேளாண் விளைப் பொருட்கள் பால், உணவு, மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் உள்ளிட்ட பல்வேறு பொருட் களின் தர நிலைகள் குறித்தும் விரிவாக பரிசீலிக்கப்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையே சரக்கு பரிமாற்றம் குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல், சுங்க நடைமுறைகளை எளிமைப்படுத்துதல், சட்டப்பூர்வ நடவடிக்கைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல் ஆகியவை குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

## மெக்காவுக்கு அச்சுறுத்தல் வந்தால் சகித்துக் கொள்ள மாட்டோம்: பாகிஸ்தான் எச்சரிக்கை



சென்னை 19, செப்டம்பர் 2026: புனித நகரமான மெக்காவை குறிவைத்து கடந்த செப்.15 அன்று ஏமனின் ஹவுதி அமைப்பினர் நடத்திய டிரோன் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக சவுதி அரேபியா தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. இந்த செயலுக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்த நிலையில், இந்த குற்றச்சாட்டை ஹவுதி அமைப்பு முற்றிலுமாக மறுத்தது.

இந்நிலையில், 'மெக்கா பாதுகாப்பு ஒப்பந்தத்தின்படி' சவுதிக்கு முழு பாதுகாப்பு அளிக்க பாகிஸ்தான் தயாராக உள்ளதாக அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜா ஆசிப் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆகஸ்ட் 7ம் தேதி பாகிஸ்தான், துருக்கி மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் இணைந்து 'மெக்கா கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில்' கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தத்தின்படி, மூன்று நாடுகளில் ஏதேனும் ஒரு நாட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், அது 3 நாடுகளின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலாகவே கருதப்படும்.

இது குறித்துப் பேசிய பாகிஸ்தான் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜா ஆசிப், "புனித நகரமான மெக்காவை பாதுகாக்க எந்த ஒப்பந்தமும் தேவையில்லை; அது எங்களது கடமை. இருப்பினும், இந்த ஒப்பந்தத்தின்படி மூன்று நாடுகளின் எல்லைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டால் கூட்டுப் பாதுகாப்பு வழங்கப்படும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. பாகிஸ்தான் எப்போதுமே சவுதி அரேபியாவுக்குத் தோளோடு தோள் நின்று ஆதரவு அளிக்கும்" என்றார்.

## இந்தியாவின் கடும் எதிர்ப்பை மீறி பாக். - சீனா எல்லை ஆணையம் தொடக்கம்



சென்னை 19, செப்டம்பர் 2026: பாகிஸ்தான் - சீனா இடையே கூட்டு எல்லை ஆணையம் நேற்று முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. பாகிஸ்தான், சீனா நாடுகள் இணைந்து தங்கள் பொதுவான எல்லையை நிர்வகிப்பதற்கான கூட்டு எல்லை ஆணையத்தை உருவாக்கி உள்ளன. இரு நாடுகளிடையே கடந்த 2013ம் ஆண்டு கையெழுத்தான எல்லை மேலாண்மை அமைப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆணையத்தின் முதல்கூட்டம் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த ஆணையத்துக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. ஒன்றிய வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்ட அறிக்கையில்,

"பாகிஸ்தான், சீனா இடையே முறையான எல்லை என எதுவுமில்லை. சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட இந்திய பகுதிகள் குறித்து முடிவெடுக்க இந்த ஆணையத்துக்கு எந்தவித சட்டப்பூர்வ அடிப்படையும் இல்லை. 1963ம் ஆண்டு பாகிஸ்தான் சீனா இடையே ஏற்பட்ட எல்லை ஒப்பந்தத்தை இந்தியா எப்போதும் அங்கீகரித்தது இல்லை. அது செல்லுபடியாகாது.

பாகிஸ்தானின் சட்டவிரோத ஆக்கிரமிப்பில் உள்ள இந்திய பகுதிகளின் (பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மற்றும் லடாக்) எல்லைகள் குறித்து முடிவெடுக்க இந்த அமைப்புக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஜம்மு காஷ்மீர், லடாக் யூனியன் பிரதேசங்கள் எப்போதும் இந்தியாவின் பகுதிகள் ஆகும்" என தெரிவித்திருந்தார். இந்த சூழலில் பாகிஸ்தான்- சீனா கூட்டு எல்லை ஆணையம் நேற்று முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இதன் மூலம் தனித்தனியாக காவல் துறை பயிற்சி பரிமாற்ற திட்டங்கள், நவீன தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் பாகிஸ்தானும், சீனாவும் ஒப்புக்கொண்டுள்ளன.

## ஹார்லிக்ஸ் புரோட்டீன் பவுடரை அறிமுகப்படுத்துகிறது - அன்றாட ஊட்டச்சத்தில் புரோட்டீனை எளிதாக இணைக்கும் புதிய முயற்சி




சென்னை 19, செப்டம்பர் 2026: புரோட்டீன் என்பது இனி ஜிம் மற்றும் உடற்பயிற்சி நடைமுறைகளுடன் மட்டும் தொடர்புடைய ஒன்றாக இல்லை. நுகர்வோர் தங்களது அன்றாட ஊட்டச்சத்தின் ஒரு பகுதியாக புரோட்டீனை அதிகளவில் சேர்க்கத் தொடங்கியுள்ளனர். வாழ்க்கை முறை வேகமாக மாறிவரும் நிலையில், புரோட்டீன் குறித்த விழிப்புணர்வும் அதிகரித்து வருகிறது. இதனால், அன்றாட வாழ்க்கையில் எளிதாக இணைத்துக்கொள்ளக் கூடிய தரமான ஊட்டச்சத்திற்கான தேவை அதிகரித்துள்ளது.

இந்த மாற்றத்தை கருத்தில் கொண்டு, அன்றாட வாழ்க்கையில் தரமான புரோட்டீனை வசதியாகவும் எளிதாகவும் சேர்த்துக் கொள்ள உதவும் வகையில் ஹார்லிக்ஸ் புரோட்டீன் பவுடரை ஹார்லிக்ஸ் அறிமுகப்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு சர்விங்கிலும் 24 கிராம் புரோட்டீன் மற்றும் 4 கிராம் ப்ரீபயாட்டிக் நார்ச்சத்து கிடைக்கிறது. வேலை, பயணம் மற்றும் பரபரப்பான அன்றாட வாழ்க்கைக்கு ஏற்றவாறு எடுத்துச் செல்ல எளிதான சிங்கிள்-சர்வ் சாச்சேக்களில் இது வழங்கப்படுகிறது.

இந்த அறிமுகம் குறித்து ஹிந்துஸ்தான் யூனிலீவர் லிமிடெட் நிறுவனத்தின் ஃபுட்ஸ் பிரிவின் நிர்வாக இயக்குநர் ராஜ்நீத் கோலி கூறியதாவது:

"100 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியம் கொண்ட ஹார்லிக்ஸ், வலுவான அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து நம்பகத்தன்மையின் அடிப்படையில் உருவான பிராண்டாகும். நுகர்வோரின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப நாங்கள் தொடர்ந்து வளர்ந்து வரும் நிலையில், புரோட்டீன் என்பது ஹார்லிக்ஸ் பிராண்டின் இயல்பான அடுத்தகட்ட விரிவாக்கமாகும்.

அன்றாட வாழ்க்கையில் புரோட்டீனை மேலும் பொருத்தமானதாகவும் எளிதில் அணுகக்கூடியதாகவும் மாற்றுவதற்கான வாய்ப்பை நாங்கள் காண்கிறோம். நுகர்வோருடன் பேசிய போது, 'வாழ்க்கையே ஒரு ஜிம்' (லைஃப் இஸ் எ ஜிம்) என்ற கருத்து முக்கியமாக வெளிப்பட்டது. பரபரப்பான வேலைநாளை சமாளிப்பது, நீண்ட தூரம் பயணம் செய்வது, மளிகைப் பொருட்களை சுமப்பது அல்லது அன்றாடப் பொறுப்புகளை தொடர்ந்து நிர்வகிப்பது என அனைத்துமே உடலுக்கு ஒரு வகையான உழைப்பு தான்.

இந்த எண்ணத்திலிருந்துதான் 'யுவர் டே இஸ் தி ரியல் ஒர்க் அவுட்' - 'உங்கள் அன்றாட வாழ்க்கையே உண்மையான உடற்பயிற்சி' என்ற எங்களது விரிவான கருத்து உருவானது. ஹார்லிக்ஸ் புரோட்டீன் பவுடர் மூலம், இந்தியாவில் கோடிக்கணக்கான மக்களின் அன்றாட வாழ்க்கையில் தரமான புரோட்டீனை எளிதாக இணைப்பதே எங்களது நோக்கம்."

அறிவியல் அடிப்படையிலான புரோட்டீன் கலவை

ஹார்லிக்ஸ் புரோட்டீன் பவுடரின் முக்கிய அம்சமாக ஃபெர்மென்டட் ஈஸ்ட் புரோட்டீன் உள்ளது. இது உடலுக்குத் தேவையான அனைத்து ஒன்பது அத்தியாவசிய அமினோ அமிலங்களையும் வழங்கும் முழுமையான புரோட்டீன் மூலமாகும். மேலும், இது குடல் ஆரோக்கியத்திற்கு ஏற்றதாகவும் உள்ளது.

இந்த தயாரிப்பின் பிடிசிஏஏஎஸ் (புரோட்டீன் டைஜெஸ்டிபிலிட்டி கரெக்ட்டட் அமினோ ஆசிட் ஸ்கோர்) மதிப்பெண் 1.0 ஆகும். இது புரோட்டீனின் தரம் மற்றும் செரிமானத் திறனை மதிப்பிடுவதற்கான அங்கீகரிக்கப்பட்ட அளவீடாகும்.

இந்த ஃபார்முலாவில் இனுலின் என்ற ப்ரீபயாட்டிக் நார்ச்சத்தும், தாவரத்திலிருந்து பெறப்படும் செரிமான என்சைமான பப்பைன் என்பதும் சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும், ஃபெர்மென்டட் ஈஸ்ட் புரோட்டீன் இயற்கையாகவே லாக்டோஸ் இல்லாதது (லேக்டோஸ்-ஃப்ரீ).

## நான் அரசியல்ல இல்லை... சரத்குமார் விரக்தி அறிவிப்பு



சென்னை 19, செப்டம்பர் 2026: பாஜ பிரமுகர் பொன் ராஜின் குடும்பத் திருமண விழா நாகர் கோவிலில் நேற்று நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மணமக்களை பாஜ தேசிய செயற்குழு உறுப்பினர் நடிகர் சரத்குமார் வாழ்த்தினார்.

பின்னர் வெளியே வந்த அவரிடம் நிருபர்கள், 'முதலமைச்சர் வெளிநாட்டுக்குப் போய் நிறைய முதலீடுகளை ஈர்த்திருக்கிறாரே?' என்ற கேட்டதற்கு 'தெரியாதுங்க... அதெல்லாம் எனக்குத் தெரியாது.

நான் அரசியல்ல இல்லைங்க... ஒதுங்கி இருக்கிறேன்.' என்று சரத்குமார் பதில் அளித்தார்.

மேலும் 'தவெக அரசின் 100 நாள் செயல்பாடு... முதல்வர் விஜய் செயல்பாடு எப்படி இருக்கிறது? என்று கேட்டதற்கு, 'என்னுடைய மாநிலத் தலைவர் இருக்காரு, அவர் பேசுவாரு...' என்று சரத்குமார் பதில் அளித்தார்.